முகவுரை

# புதிய கிறிஸ்தவனுக்கு ஒரு வார்த்தை

*அமெரிக்க இந்தியன் ஒருவரிடம் கர்த்தர் அவருக்கு என்ன செய்தார் என்று கேட்கப் பட்டது. அந்த மனிதர் சில காய்ந்த இலைச் சருகுகளை சேகரித்து வட்டமாகப் போட்டார். ஒரு புழுவைக் கொண்டு வந்து அந்த வட்டத்தின் நடுவில் விட்டு சருகுககளிலே தீ வைத்தார். தீயானது சுற்றிலும் நெருங்கி எரிந்து கொண்டிருக்கையில் அந்தப் புழு வெந்து கருகிப்போகிற நிலை உருவானபோது, அந்த இந்தியன் ஒரு குச்சியை அந்த இலைச் சருகின் வட்டத்தில் வைத்தார். உடனே அந்தப் புழு அந்தக் குச்சியைத் தாவிப்பிடித்து ஏறி தன்னைப் பாதுகாத்து கொள்ள வழி கண்டுபிடித்தது. அந்த மனிதன் அந்தக் குச்சியைத் தூக்கி காட்டி, "இதைத்தான் கர்த்தர் எனக்குச் செய்தார்!" என்றார்.*

*கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றிருக்கிறார்கள் (எபேசியர் 1:3; 2 பேதுரு 1:3). தேவன் தமது கிருபையால் அனைத்து மக்களுக்கும் இரட்சிப்பைத் திட்டம் பண்ணினார் (யோவான் 3:16-19). அவருடைய திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் ஒருவர் அவருடைய (சரீரமாகிய) சபையில் அங்கமாக இருக்கிறார். அவர் மகா பரிசுத்தராகிய தேவனுடைய "ஆசாரியனாக" தொல்லை நிறைந்த இந்த உலகில் சமாதானத்தைக் கொண்டுவரும்படி தேவனால் பயன்படுத்தப் படுகிறார். தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிற யாவரும் ஒரே சரீரத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு, நம்பமுடியாத அளவுக்கு ஐக்கியத்தைப் பகிர்ந்து பெலத்தையும் உற்சாகத்தையும் அடைகின்றனர்.*

*திருமறையில் மனமாற்ற நடைமுறையை "இருளின்" வழியிலிருந்து "வெளிச்சத்தின்" வழிக்குத் திரும்புவதாக விவரிக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கை பாவ வாழ்க்கையிலிருந்து வித்தியாசப் பட்டதாய் இருளிலிருந்து வெளிச்சம் பிரகாசிப்பதைப் போன்றது. இந்த உருவகம் கிறிஸ்தவத்தின் உறுதித் தன்மையை விவரிக்கிறது. இருள் பயமுறுத்துகிறது, ஆனால் வெளிச்சம் ஆறுதலளிக்கிறது. ஒரு குழந்தை இரவு நேரத்தில் வெளிச்சத்தை விரும்பும் ஏனெனில் வெளிச்சம் பயத்தை விரட்டியடித்து பாதுகாப்பை அளிக்கிறது. கடலில் செல்லும் யாத்திரிகளுக்கு கடற்கரையின் கலங்கரை விளக்குகள் ஆபத்திலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்காக வரிசைப் படுத்தப்படுகின்றன.*

*கிறிஸ்தவர்களாக இருப்பதில் கிடைக்கும் சந்தோஷத்தை கண்டு பிடித்தவர்களுக்கு இந்தப் பாடங்கள் எழுதப் பட்டுள்ளன. கிறிஸ்துவிடம் வருகிற ஒருவரின் வாழ்வின் ஒவ்வொரு தோற்றமும் புதிதாய் மாற இரட்சிப்பு ஏதுவாக்குகிறது. தேவன் கொடுக்கும் புதிய வாழ்வு நிறைவான அவரது கிருபையையும் ஆசீர்வாதங்களையும் கொண்டுள்ளது. இந்தப் புதிய வாழ்வு சந்தோஷத்தால் நிறைந்திருந்தாலும் அது புதிய சவால்களையும் கொண்டுள்ளது.*

*கிறிஸ்தவனை பிசாசானவன் பாவம் செய்யும்படி சோதிக்கக்கூடும். வாழ்வில் ஏற்படும் மன அழுத்தத்தால் ஒருவேளை தேவனைத் தொழுதுகொள்ளுகிற விஷயத்தில் தவறோடு ஒத்துப் போகும்படி சோதிக்கக்கூடும். உங்களுடைய வாழ்வில் வரும் கோப தாபங்கள் வேதத்தின் போதனையின்படி நடவாமல் உலக வழக்கத்தின்படி ஒத்த வாழ்வை வாழச் செய்யும். கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வது சந்தோஷம் நிறைந்ததாயினும், கடினமானதும் கூட. சில கிறிஸ்தவர்கள் வாழ்வில் சோர்வடைந்து தங்கள் விசுவாசத்தை விட்டு விடுவார்கள், ஏனெனில் அவர்கள் தங்களை மிகவும் குறைவுள்ளவர்கள் என்றும் வருகிற கஷ்டங்களோ மிகப் பெரிது என்றும் நினைக்கிறார்கள். இது உங்களுக்கு நேரிட அனுமதிக்காதீர்கள்! இது உங்களுக்குக் கட்டளையாக உள்ளது. கிறிஸ்துவின் சரீரத்துக்கு நீங்கள் புதியவரானதால், ஒரு கிறிஸ்தவனிடத்தில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்றறிந்து தொடர்ந்து உங்களுக்குள்ளே அவைகளை நினைப்பூட்டிக் கொள்ளுங்கள்.*

*இந்த படிப்புகள் உங்களுக்கு உற்சாகமளிப்பதை நீங்கள் காணலாம். ஒரு ஒப்புக்கொடுத்த கிறிஸ்தவனாக வாழ்வதில் உள்ள நடைமுறைப் பிரச்சனைகளை நாம் விவாதிக்கப் போகிறோம். தேவனுடைய பிள்ளைகளாய் வாழ்வதில் உள்ள பெரிதான அர்ப்பணிப்பு மற்றும் ஒப்புக்கொடுத்தலில் உள்ள ஒரு அறைகூவலை சந்திப்போம்.*

*ஒளியையும் இருளையும் ஒரு உருவகமாக பயன்படுத்தி நம்முடைய மையக் கருத்து அமைந்துள்ளது. பவுல் புறஜாதிகளிடத்திலேபோய் “அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்திரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்களை இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படி நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்று கர்த்தர் கட்டளையிட்டார்” (நடபடிகள் 26:18). இப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவன். நீங்கள் இருளினின்று ஒளியினிடத்திற்கு திரும்பினவர். நீங்கள், ‘‘விசுவாசத்தைக் கொண்டு பரிசுத்தமாக்கப்பட்டவராதலால்’’ தேவனுடைய பிள்ளையாக வித்தியாசப்பட்ட வாழ்க்கை முறையை நீங்கள் பெற்றவர். ஒவ்வொரு பாடத்தையும் படியுங்கள், நீங்கள் கிறிஸ்தவரானதால் உங்களுக்கென்று வைக்கப் பட்டுள்ள அற்புத ஆசீர்வாதங்களைக் கண்டு பிடியுங்கள்.*